**சிலாபம் நகர சபை**
**புத்தளம் மாவட்டம**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 29 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சிலாபம் நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

17 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரமான மீதிக்கும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 34,864,403 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டிற்கு முன்னிலிருந்து கொண்டுவரப்படுகின்ற உள்ளுராட்சி ஆணையாளரிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை களியாட்ட வரி மீளளிப்புக்களின் பெறுமதி ரூபா 501,257 ஆக இருந்ததுடன், அந்த வருமானத்தை அறவிடுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கு முன்னிலிருந்து கொண்டுவரப்படுகின்ற சபையின் 05 சொத்து விடயங்களை வாடகைக்கு வழங்கியதற்காக அறவிட வேண்டிய ரூபா 591,631 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,651,123 ஆக இருந்ததுடன் அதில் 2005 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய கடன்கொடுத்தோர் மீதி ரூபா 16,112,736 ஆகும். நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற இந்தக் கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்த்து வைப்பதற்காக நகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சில வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 8,660,133 தொகையான முற்செலுத்தப்பட்ட பெறுமதி மற்றும் ரூபா 73,940 தொகையான சபையினால் மேற்கொள்ளப்பட்ட வைப்புப் பெறுமதி என்பன தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 69,265,422 பெறுமதியான 08 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலை, பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் பொழிப்பு அறிக்கை போன்ற சான்றுகள் காணப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

வைப்புக்களின் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 10,986,475 பெறுமதியான காலாவதியான வைப்புக்களை இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,861,605 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,368,525 ஆக இருந்தது. மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் முறையே ரூபா 37,346,809 மற்றும் ரூபா 19,097,034 தொகையான மூலதன மானியம் மற்றும் ரூபா 39,827,320 மற்றும் ரூபா 32,619,424 தொகையான மூலதனச் செலவினங்களைக் கணக்கிலெடுத்ததன் பின்னர் மிகை முறையே ரூபா 45,381,094 மற்றும் ரூபா 22,846,135 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 22,534,959 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

(அ) மீளாய்வாண்டின் போது சபையின் மொத்த செயற்பாட்டு மானியம் ரூபா 82 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மொத்த செயற்பாட்டு மானியம் ரூபா 47 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 35 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாட்டு வருமானம் ரூபா 90 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் செயற்பாட்டு வருமானமான ரூபா 83 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 07 மில்லியன் அதிகரிப்பாகும்.

(இ) மீளாய்வாண்டின் மூலதன வருமானம் ரூபா 37 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மூலதன வருமானமான ரூபா 19 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 18 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்கூறப்பட்ட நிலைமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 45 மில்லியனாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் மிகையான ரூபா 23 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 22 மில்லியனால் நிதிவிளைவுகளில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம். உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | பாதிடப்பட்ட | உள்ளபடியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) வீதவரி | 21,767 | 21,877 | 28,225 | 21,680 | 13,645 | 277,470 |
| (ஆ) வாடகை | 38,297 | 40,344 | 17,561 | 80,858 | 66,532 | 67,217 |
| (இ) அனுமதிப்பத்திரக் கட்டணம் | 171 | 1,419 | - | 2,010 | 7,832 | - |
| (ஈ) ஏனைய வருமானம் | 14,625 | 17,314 | 35,719 | 18,150 | 11,747 | 22,877 |

வருமானத்திற்காக முன்னைய ஆண்டின் உள்ளபடியான மற்றும் மதிப்பிடப்பட்ட பெறுமதியை மீளாய்வாண்டின் உள்ளபடியான பெறுமதியுடன் கருத்தில் கொண்ட போது மீளாய்வாண்டில் வருமான மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை முறையானதாக இருந்தமை அவதானிக்கப்படவில்லை. அதாவது அனுமதிப்பத்திரக் கட்டண மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 170,500 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பெறுமதி ரூபா 1,248,395 ஆக இருந்தது. அதாவது 732 சதவீத அதிகரிப்பாகும்.

### 2.3.2 நிலுவை வருமானம்

கீழே காண்பிக்கப்படுகின்ற வருமான விடயங்களில் நிலுவை வருமானத்தை சேகரித்தல் தொடர்பாக வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சேகரிக்கப்பட்ட நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானங்கள் சதவீதமாகக் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | 2015 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவைத் தொகை | ஆண்டின் பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்க வேண்டிய வருமானம் (மொத்தம்) | ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் சேகரிக்க வேண்டிய வருமானத்தின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| (அ) வீதவரி | 27,747,042 | 21,680,940 | 49,427,982 | 21,447,190 | 43 |
| (ஆ) வியாபார நிலைய வாடகை | 13,615,415 | 17,105,091 | 30,720,506 | 11,618,208 | 38 |

மேற்கூறப்பட்ட வருமானம் விடயங்களில் நிலுவை வருமானம் மற்றும் பட்டியலிடப்பட்ட வருமானம் சேகரித்தல் என்பவற்றின் செயலாற்றல் 38 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### 2.3.3 முச்சக்கர வண்டிக் கட்டணம்

(அ) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் படி முச்சக்கர வண்டிக் கட்டணம் திருத்தப்பட்டு அறவிடுவதற்காக சட்டஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமுலிலுள்ள 27 முச்சக்கர வண்டித் தரிப்பிடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை 318 ஆக இருந்ததுடன் அதில் 71 முச்சக்கர வண்டிகள் 2015 ஆம் ஆண்டிற்காகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

(i) சபை வியாபார அறிவித்தல்கள் மற்றும் அறிவித்தல் பதாதைகளிலிருந்து கட்டணம் அறவிடுவதற்குரிய உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 318.500 தொகையான நிலுவை அறிவித்தல் பதாதைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 கடை வாடகை

(அ) 2013 பெப்ரவரி மாதம் முதல் உரித்தாகின்ற பிரகாரம் கடை வாடகை திருத்தம் அமுல்படுத்தப்பட்டு வருமானப் பதிவேட்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த திருத்தத்தின் பிரகாரம் கடை வாடகை அறவிடுவதற்குச் சபை தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 17,561,226 தொகையான கடை வாடகை நிலுவை காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் எந்த வாடகைப் பணத்தையும் செலுத்தாதிருந்த வாடகையாளர்கள் கணிசமான அளவில் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்து உரிய முரண்களுடன் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2015 | | | 2014 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **பாதீடு செய்யப்பட்ட** | **உள்ள படியான** | **முரண்கள்** | **பாதீடு செய்யப்பட்ட** | **உள்ள படியான** | **முரண்கள்** |
| | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** | **ரூபா'000** |
| ஆளணி வேதனங்கள் | 86,924 | 89,767 | (2,843) | 78,278 | 64,502 | 13,776 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 44,921 | 34,007 | 10,914 | 32,272 | 28,619 | 3,653 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உப மொத்தம் | 131,845 | 123,774 | 8,071 | 110,550 | 93,121 | 17,429 |
| மூலதனச் செலவினம் | 17,450 | 12,661 | 4,789 | 21,958 | 32,619 | (10,661) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 149,295 | 136,435 | 12,860 | 132,508 | 125,740 | 6,768 |

(அ) மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட மூலதனச் செலவினத்தில் 27 சதவீதம் அதாவது ரூபா 05 மில்லியன் தொகை உரிய மூலதன செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினத்தை விஞ்சி ரூபா 2.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சுடலைக்கூட நிர்மாணம்

2014 ஆம் அண்டின் தெயட்ட கிருள (தேசத்திற்கு மகுடம்) தேசிய அபிவிருத்தி நிகழச்சித்திட்டத்தின் கிழ் சிலாபம் சுடலைக்கூடம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையில் 50% சதவீதமான தொகையை நகர சபையினால் பங்களிப்பைச் செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. சபையின் பங்களிப்பை செய்வதற்காக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூபா 6,250,000 தொகையான கடன் பணம் பெறப்பட்டிருந்ததுடன் உரிய செயற்திட்டம் திட்டமிடப்பட்ட பிரகாரம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக அந்தக் கடன் பணம் 2015 மே 14 ஆந் திகதி நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்றைத் தாபிப்பதற்காக பொருத்தமான காணியொன்று 2015 நவம்பர் 01 ஆந் திகதி முதல் 2025 ஒக்தோபர் 31 வரையான 10 வருட காலத்திற்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்டு அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 224,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட காணியில் கழிவுப் பொருட்களை அகற்றுதல் தொடர்பாக மூன்றாம் தரப்பினர்களின் எதிர்ப்பு சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்தது. கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக சபையினால் தயாரிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கைகளின் கழிவுப் பொருட்களை வகைப்படுத்துதல், கூட்டுப்பசளை தயாரித்தல், உக்காத கழிவுகளை விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் தகிதிய PED/RED/01/04/2014/01 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 04(அ) முதல் (ஊ) வரையான பந்திகளின் பிரகாரம் நீண்ட கால துார நோக்குடன் உரிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதை இலக்காகக் கொண்டு செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத்

திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு மாற்றமான முறையில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

**4.2 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் | மிகை |
|---|---|---|---|---|
| பதவிநிலை | 02 | 01 | 01 | - |
| இரண்டாம் | 70 | 29 | 41 | - |
| ஆரம்ப | 136 | 161 | 08 | 33 |
| | 208 | 191 | 50 | 33 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 208 ஆக இருந்ததுடன் 33 ஊழியர்கள் மிகையாக இருந்தனர். சேவையில் ஈடுபடுத்தப்பட்ட உள்ளபடியான எண்ணிக்கை 191 ஆகும்.

(ஆ) மொத்த ஊழியர் எண்ணிக்கையில் மிகையொன்று காணப்பட்ட போதிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 50 ஆக இருந்தது.

(இ) ஆரம்ப தொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியிணியினர் எண்ணிக்கை 136 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 161 ஆகும். இதன் பிரகாரம் மொத்த ஊழியரின் மிகை ஆரம்பப் பிரிவில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம்
(எ) கழிவு முகாமைத்துவம்